www.tamilarangam.net


# களத்தில்

களம்-11 | வைகாசி 1987 | ஊக்குவிப்பு - ரூபா 3


இராணுவ மினி முகாம்கள் தகர்ப்பு | பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன | இராணுவத்தினர் சிறைப்பிடிப்பு, சரண் | மேதின ஊர்வலத்தில் லட்சக்கணக்கானோர்

# தமிழீழ தேச விடுதலைப்போராட்ட வரலாற்றில்

# புதிய அத்தியாயம்!

**யாழ் பொலிஸ் விடுதி இராணுவ மினிமுகாம், வல்வெட்டித்துறை மலியத்தனை இராணுவ மினிமுகாம், காங்கேசன் ஹாபர்வியூ இராணுவமினிமுகாம் என்பன தாக்கி அழிக்கப்பட்டு பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டும், எட்டு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டும், பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டும் படைக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது. எமது மண்ணிலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டியடிக்கும் வரலாற்றுக் கட்டம் ஆரம்பமாகிவிட்டது.**

**சகல ஒடுக்குமுறைகளிற்கு மெதிரான கிளர்ச்சித் தினமான மேதினத்தில் லட்சக் கணக்கான தமிழீழ மக்களின் எழுச்சி எமது போராட்ட வரலாற்றில் ஓர் திருப்பு முனையாகும். ஒன்று திரண்ட மக்கள் சக்தி[illegible] எத்தகைய கொடூர அடக்கு முறைகளினாலும் முறியடிக்க [illegible] இம் மேதின எழுச்சி [illegible] [illegible]குமுறை உலகுக்கு [illegible]**

மாபெரும் தியாகங்களினூடு வளர்ச்சி பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இராணுவமினி முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டதோடு புதியதொரு அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டிலுள்ள பதினொரு இராணுவ முகாம்களையும் பலப்படுத்தி அங்குலம் அங்குலமாக விஸ்தரிக்கும் லலித்தின் திட்டம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானிலும் சீனாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களுடனும் பிரித்தானிய, இஸ்ரேலிய கூலிப்படையினருடனும் பலப்படுத்தப்பட்ட இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்காக முகாம்களைச் சுற்றி மினி முகாம்கள் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு மினி முகாமிலும் நூற்றுக்கணக்காகஇராணுவச் சிப்பாய்கள் இருப்பர். இவை பிரதான முகாமிற்கு அண்மையாக ஆயுதங்கள், ரவைகள், உணவுகள் கொண்டு செல்லக் கூடிய வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கும். பிரதான முகாம்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட இம் மினி முகாம்கள் பாரிய பலமுள்ளவையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.


பிரதான முகாம்களைச் சுற்றியுள்ள தொலைத்தொடர்பு நிலையம், வைத்தியசாலை, சீமெந்துத்தொழிற்சாலையின் ஒரு பகுதி, கோவில்கள் என்பவற்றிலேயே இம்மினி முகாம்கள் அமைக்கப்பட்டன. நாம் முதலிலேயோ அல்லது இக்கட்டிடங்களுள் இராணுவம் உட்புகும்போதோ தாக்குதல் நிகழ்த்தி அழித்திருக்க முடியும். ஆனால் இதனால் மக்களின் அத்தியாவசிய தேவைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையாக இருந்தோம்.

யாழ். பொலிஸ் விடுதி மினி முகாம் தாக்கப்படும்போது தொலைத்தொடர்பு நிலையத்தைப் பாதுகாப்பதிலும் காங்கேசன் துறை ஹாபர்வியூ மினிமுகாம் தாக்கப்படும் போது சீமெந்துத்தொழிற்சாலையைப் பாதுகாப்பதிலும் நாம் மிகுந்த கவனம் எடுத்தோம்.

அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட மூன்று மினிமுகாம் தாக்குதல்களிலும் A. K.,

(7-ம் பக்கம் பார்க்க)

## பகற் கனவுகள்!




## கிராமரீதியான சுயபாதுகாப்பு காவல் நிலையங்கள்

சிறிலங்கா அரசின் அனைத்து அடக்குமுறைகளையும் முறியடித்து வளர்ச்சியடைந்து வரும் எமது விடுதலைப் போரில் மக்கள் தாங்கிக் கொள்ளும் துயரங்கள் கணக்கிலடங்கா. எமது மக்களைப் பாதுகாத்து, ஓர் பரிபூரண விடிவுக்காக அனைத்தையும் ஏற்று தம்மையே பரிபூரணமாக அர்ப்பணிக்கும் தியாகிகளின் தியாகம் ஈடிணையற்றது. இந்த வகையில் அநேக பகுதிகளில் இராணுவ முகாம்[illegible] இராணுவத்தினருக்கு சிறைச்சாலைகளாகி விட்டன. இதை சாதகமாகக் கொண்டு எமது புரட்சிகர போராட்டத்தை குழப்பியடிக்க சமூக விரோதிகள், எதிர்ப்புரட்சிகர சக்திகள்... முனையலாம். சிறிலங்கா அரசோ முழுமூச்சுடன் பாரிய இன ஒழிப்பிலீடுபட்டு வரும் இந்நிலையில் எமது மக்களைப் பாதுகாத்து வளர்ச்சி பெறும் விடுதலைப் போராட்டம் போராளிகள் பற்றி எதிரிக்கு கிடைக்கும் எந்த ஒரு சிறிய தகவல்கள்கூட எமக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தும். எனவே அனைவரும் புரிந்துணர்வுடன் போராட்டம் பற்றிய எந்தவொரு விடயமாயினும் மிகமிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய காலகட்டம் இது. எமது பிரதேசத்தை, எம் மக்களை, எம்மை, நாட்டை பாதுகாத்துக் கொள்ள அனைவரும் முன் வர வேண்டும். இந்த வகையில் கிராம ரீதியான சுயபாதுகாப்பு [illegible] நிலையங்கள் மிகமிக அவசியமானவை.

தரை வழியாக நகர முடியாத இராணுவம் ஆகாய, கடல் மார்க்கமாக ஊடுருவ முனையலாம். 'காட்டிக் கொடுப்போரைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற முயற்சிக்கலாம். பல்வேறு சாதனங்கள், ஒற்றர்கள் மூலம் வதந்திகளைப் பரப்பி பயப்பிராந்தியூட்டி போராட்டத்தில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்த முனையலாம்... மேலும்

(7-ம் பக்கம் பார்க்க)

## போராளிகள் என்றும் இறப்பதில்லை

வழக்கம்போல அன்றும் அவன் அதிகாலையிலேயே நித்திரையை விட்டு எழுந்து தூங்கிக்கொண்டிருந்த மனைவிக்கும் பிறந்து இரண்டுமாதமே ஆகியிருந்த தனது குழந்தைக்கும் முத்தம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான். மக்கள் மத்தியில் அவர்களின் அன்றாடப் பிரச்சனைகளில் கலந்து கொண்டு அவர்களிற்கு போராட்டம், புரட்சி, விடுதலை போன்றவற்றைப் பற்றி தெளிவு படுத்தி அவர்களையும் இப்போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அணிதிரட்டுவதே அவனது நாளாந்த வேலை.

கல்குடா மக்களோடு அனேகமாக ஒவ்வொரு வீட்டிலும் அவர்களுள் ஒருவனாகப் பழகியவன்; மக்களின் அன்புக்குப் பாத்திரமானவன். அன்றும் அவன் கல்குடாவில் நிற்கும்போது சுமார் நூறு கொமாண்டோக்கள் ஊரைச்சுற்றி வளைத்துவிட்டனர். எந்தத் திசையில் திரும்பினாலும் கொமாண்டோக்கள் என்றநிலையில் தப்பிக்க முனைந்தபோது கண்டுவிட்டனர்.

அதோ குமார் சுடு என்றான். அடுத்தகணம் அவன் காலைக் குண்டுகள் துளைத்துவிட்டன. அவன் ஓடத்தொடங்குகிறான்; அவர்கள் துரத்துகிறார்கள். அரைமைல் தூரம் ஓடியிருப்பான் மேலும் ஓடுவதற்கு வலுவிழந்து தள்ளாடி விழுந்துவிட்டான்.

பின்னால் கொமாண்டோக்கள் வரத்துவதை உணர்ந்தான், இனிமேல் தான் தப்ப முடியாது அவர்கள் பிடித்துவிடப் போகிறார்கள் என எண்ணியவன் சயினைட் குப்பியை வாயினுள் வைத்தான். ஏதோ சிந்தித்தவன் குப்பியைக் கடிக்கவில்லை, தூக்கி எறிந்துவிட்டு இடுப்பில் செருகியிருந்த குண்டை எடுத்தான், கிளிப்பைக் கழற்றி விட்டு கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு குப்புறக் கிடந்துவிட்டான்.

துரத்தி வந்த கொமாண்டோக்கள் இரண்டு பேர் அவன் இறந்து விட்டான் என நினைத்துத் தூக்கவும் அவன் குண்டை வெடிக்க விட்டான். இரு கொமாண்டோக்களும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட குமார் தனதுயிரை தமிழீழ மண்ணுக்கு அர்ப்பணித்தான்.

தான் இறப்பது தவிர்க்க முடியாது என்று தெரிந்த கணத்திலும், இறக்கும் போது கூட எதிரியையும்அழிக்கவேண்டும் என சிந்தித்த மாபெரும் தியாகியவன் இன்று எம் மத்தியில்இல்லை. ஆனால் அவனின் உணர்வுகள் என்றும் எம்மை விட்டகலாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீதியையும், தர்மத்தையும் சுதந்திரத்தையும் இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்.



# இறுதி வெற்றியை நோக்கி...

தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் ஆதரவுடனும் பங்களிப்புடனும் விடுதலைப் புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தமிழீழ விடுதலைப் போராட்டம் அதன் பரிணாம வளர்ச்சியில் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

எமது தாயகமண்ணிலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டியடிக்கும் முதல் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஒருமாத கால இடைவெளியினுள் அடுத்தடுத்து மூன்று இராணுவ மினி முகாம்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டதுடன் எட்டு இராணுவத்தினர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் விடுதலைப் போரில் ஓர் புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளது.

சிதைச்சலைய கிவிட்ட இராணுவ முகாம்களில் உள்ள சிறீலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியான எமது அதிரடித்தாக்குதலால் பீதியும் விரக்தியும் அடைந்துள்ளனர். பயத்தினால் இராணுவத்தினர் லீவு கேட்டு கிடைக்காக பட்சத்தில் மேலதிகாரிகளை சுட்டு விட்டு தற்கொலை புரிவது அன்றாட நிகழ்வுகளாகி விட்டது. விடுமுறையில் வீடு செல்லும் சிப்பாய்கள் திரும்பி வருவதே கிடையாது. இராணுவத்தினர் தப்பியோடி எம்மிடம் சரணடைகின்றனர். கட்டுப்பாடற்ற முறையில் வளர்க்கப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினரிடையே ஊடுருவலும் குழப்பங்களும், சதிகளும் மலிந்துள்ளன.

மொத்தத்தில் இராணுவ ரீதியாக சிறீலங்கா அரசு சந்திக்கப்போகும் தோல்விகளுக்கும் இராணுவத்தை பூரணமாக விரட்டியடிக்கும் இறுதிக்கட்டப் போரிற்கும் அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

இதே நேரம் ஓர் உள்நாட்டில் இடம் பெறமுடியாத ஆகாயமார்க்கமான பாரிய குண்டு வீச்சுக்களும் அத்தியாவசிய தேவைகளான எரிபொருள், உணவு, மருந்துவம் போன்றவற்றிற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளும் தமிழீழத்தை தன் பூரண எதிரி நாடாக சிறீலங்கா பிரகடனப் படுத்தியிருப்பதை வெட்டத்வெளிச்சமாக்குகிறது. பாடசாலைகள் வைத்தியசாலைகள், மத வழிபாட்டுத்தலங்கள் போன்றன நிர்மூலமாக்கப்படுவதும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வுசீர் குலைக்கப்பட்டு தினசரி கோரமாக கொல்லப்படுவதும்.

"தமிழ் பேசும் ஒவ்வொருவரும் சிறீலங்கா அரசின் பூரண எதிரிகள் என்பதையும் ஜன்மத்து விரோதிகள் என்பதையும்" தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

காலங்காலமாக அடிமை வாழ்வு வாழ்ந்து தமிழினப் சந்ததி சந்ததியாக செய்துவந்த வரலாற்றுத் துரோகத்தை இழைக்காமல் தமிழீழ தேசிய கீதத்தை இசையமைத்துப் பாட தயாராகி வருகின்றது. இன்றைய புரட்சிகர சந்ததி.

கடந்த மேதினத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இலட்சகணக்கான மக்கள் அணிதிரண்டு "சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறிந்து சகலரும் சரிநிகர் சமானமாக வாழும் தமிழீழத்தை வென்றெடுப்பதென" பிரகடனம் செய்தனர். 524 தியாக வேங்கைகளினதும் அதைப்போல் 40மடங்கு தொகையான மக்களினதும் அளப்பெரும் தியாகங்களால் கட்டி வளர்க்கப்பட்ட போராட்டம் இன்று அதன் வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிவருகிறது.

# போதைவஸ்து ஒரு சமுதாய கொல்லி

இன்று உலக ரீதியில் இன்று உலக மக்களின் பயங்கர எதிரியாகவும் உயிர்க் கொல்லியாகவும் போதைவஸ்து விளங்குகிறது. சர்வதேசரீதியில் சில சமூக விரோத செயற்பாடுகளை அங்கீகரித்துச் செல்லும் முதலாளித்துவ நாடுகளில் கூட போதைவஸ்து விற்பனைக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது.

நெருக்கடிமிக்க இன்றைய சூழ்நிலையில் ஓர் கொடிய எதிரியிடமிருந்து எம் மக்களை காக்க அரும்பாடுபட்டு வரும் இவ்வேளையில் எம்மை நாமே அழிக்கும் விதமாக போதைவஸ்து பாவனை தமிழீழமெங்கும் பெருகி வருகிறது.

எம் மக்களை ஆரோக்கிய மற்றவர்களாக்கி படிப்படியாக அழிக்கும் நோக்குடன் கூர்மையடைந்து வரும் இப் போராட்டத்தை நசுக்கும் முகமாகவும் போதை வஸ்துகளை தமிழீழ பிராந்தியத்தில் சில ஏகாதிபத்திய சக்திகள் விநியோகித்து வருகிறார்கள்.

போதைவஸ்த்துக்களாக அபின், கஞ்சா, ஹெரோயின் மர்ஜுவானா L. S. D போன்றனவும், மருந்துவ சிகிச்சைக்கு பாவிக்கப்படும் சில மருந்துப் பொருட்களும் போதை வஸ்தாக துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

போதைவஸ்து ஆரம்பத்தில் அதிக உணர்வுகளைத் தூண்டி பிற்பட்ட நிலையில் அதேயளவு சோர்வு, சமுதாயத்தில் விரக்தி, உடலில் நடுக்கம். ஈற்றில் தன்னைத்தானே அழிக்கும் மனோ நிலையைத் தோற்றுவிக்கும். போதைவஸ்து பாவனையின் ஆரம்ப அறிகுறியாக மூச்சு விடுவதில் கடினம், பலவீனம், அதிக வியர்வை வாந்தியெடுத்தல் மலச்சிக்கல், அதிக நித்திரை, அவதான மின்மை போன்ற பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன.

போதைவஸ்து பாவனையால் பாதிக்கப்பட்டோர் உடன் வைத்தியரை நாடி தகுந்த சிகிச்சை பெறாவிடின் மரணத்தை தவிர்க்க முடியாது.

சமீபத்தில் எடுத்த புள்ளி விபரங்களின்படி 3000ற்கு மேற்பட்டோர் வரை போதைவஸ்து பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் பாடசாலை மாணவ மாணவியரும் அடங்கியுள்ளார்கள் என்பதை ஒவ்வோர் பெற்றோரும் நன்கு கவனத்திலெடுக்க வேண்டும்.

போதைவஸ்து பாவனையாளர் ஓர் சிறுதொகையினரா யிருப்பினும் காலக்கிரமத்தில் அதுபல்கிப் பெருகி முழு நாட்டையும் குட்டிச்சுவராக்கும் ஆபத்தை உணர்ந்தே சர்வதேச ரீதியில் போதைவஸ்து விற்பனைக்கு மிகக் கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

மனிதத்துவத்தை முன்னிட்டு மரணதண்டனை தவிர்க்கப்பட்ட நாடுகளில் கூட போதைவஸ்து விற்பனைக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனவே தான் தமிழீழத்தில் போதைவஸ்து பாவனை சிறியவையேனும் அநுமதிக்க முடியாது.

எனவே போதைவஸ்து பாவனையை உடன் நிறுத்துமாறு போதைவஸ்து பாவனையாளர் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் போதைவஸ்து விற்பனை செய்வோர், போதைவஸ்து ஏஜெண்டுகளை முற்றாக கட்டுப்படுத்த சர்வதேச ரீதியில் எடுக்கப்படும் மிகக் கடுமையான தண்டனை எடுக்க வேண்டி நேரிடும் என இறுதியாக எச்சரிக்கிறோம்.

இத்துடன் சமுதாய ரீதியாக இடம் பெறும் சமூக விரோத செயற்பாடுகளின் ஏஜண்டும், உயிர்கொல்லியானதுமான கசிப்பு விற்பனையையும் பாவனையையும் எம் இனத்தை பாதுகாப்பதற்காக கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழீழ தேச விடு... ...

(1-ம் பக்கத் தொடர்)

A.K.L.M.G., R.P.G உட்பட முப்பத்தாறு ஆயுதங்கள் ஆயிரக்கணக்கான ரவைகள் இராணுவ உபகரணங்கள் எட்டு இராணுவத்தினர் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளோம். பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர்.

இதன் விளைவு தமிழீழப் பகுதியெங்கும் பல மினி முகாம்கள் மூடப்பட்டன. வீடு போவதற்கு லீவு கேட்டு இராணுவத்தினர் போராட்டம் நடத்துகின்றனர். பல அதிகாரிகள் கொல்லப்பட்டும் இராணுவத்தினர் தற்கொலை செய்தும் உள்ளனர். முகாம்களை விட்டுத் தப்பி ஓடி எம்மிடம் சரணடைகின்றனர்.

தனது தோல்விகளைமறைக்க முயன்ற லலித் வைத்தியசாலைகள் மீது ஷெல் ஏவியும், அப்பாவி மக்கள் மீது பொம்மர், ஹெலியால் தாக்கியும் தனது இயலாமையை வெளிப்படுத்தினர். இவரின் இக் கோமாளித்தனம் சர்வதேச ரீதியில் சிறீலங்காவிற்குப் பெரும் அவப் பெயரைச் சம்பாதித்துள்ளது. உலகநாடுகளும் இந்தியாவும் உண்மையைப் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம், சர்வதேச ரீதியில் எமது போராட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்

உள்நாட்டிலும் தமிழீழ மக்களை எம்முடன் இணைத்துக் கொள்வதில் வெற்றிகள் கண்டு வருகிறோம். விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்த எதிரியை விரட்டியடிக்க எம்மால் செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களிலும் மக்களின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது.

எமது ஆயுதத் தொழிற்சாலைகளில் பகுதி நேரமாக உழைப்பதிலும், தேவையான பொருட்களைச் சேகரித்துக் கொடுப்பதிலும், பொது இடங்கள், இராணுவமுகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பதுங்கு குழிகள் வெட்டுவதிலும், கிராமப் பாதுகாப்பில் இரவுக்காவலில் ஈடுபடுவதிலும் மக்களின் உள் பிரச்சனைகளில் கலந்து கொள்ளும், இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவிபுரியும் கிராம நீதி மன்றங்களிலும், பிரசார வேலைகளிலும், போர் முனையில் போராளிகளிற்கு உதவி புரிவதிலும், காயம் பட்டோரைப் பராமரிப்பதிலும் மேலும் மேலும் பலவழிகளிலும் மக்களின் பங்களிப்பு பெருகிவருகிறது.

ஒரு சில உயரிய சிந்தனை கொண்ட ஆயுதந்தாங்கிய போராளிகளால் ஆரம்பிக்கப் [illegible] இன்று அனைத்து மக்களும் பங்கு கொள்ளும் ஒரு மக்கள் போராட்டமாக வளர்ச்சியடைந்து விட்டது.

தொடர்ச்சியாக அனேகமாக ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்டு வந்த பொம்பர், ஹெலி தாக்குதல்களிற்கு மத்தியிலும் நாம் விடுத்த குறுகிய கால அழைப்பை ஏற்று மேதின எழுச்சி ஊர்வலத்தில் திரண்டிருந்த லட்சக் கணக்கான மக்கள் எமது போராட்டத்திற்கு ஓர் உத்வேகத்தையும், புத்துணர்ச்சியையும் கொடுத்துள்ளனர்.

எத்தகைய வல்லரசுகளினதும், உலக இனவெறியர்களினதும் கூட்டினால் எம்மைத் தோற்கடிக்க முடியாது என்பதை சிறிலங்கா இனவெறி அரசிற்கும் அதன் எஜமானனை அமெரிக்காவிற்கும் இவ் எழுச்சி ஊர்வலம் புலப்படுத்தியுள்ளது.

என்னதான் இன்னல்கள் வரினும் உடமைகள் அழிக்கப்படினும் உயிர்கள் பலியெடுக்கப்படினும் எமது இலட்சியமான சோஷலிசத் தமிழீழத்தை அடைந்தே தீருவோம் என்பதில் மக்களுடைய உறுதி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கொழுத்தும் வெய்யிலிலும் ஹெலியின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கிடையிலும் ஆறு மைல் நீளமான ஊர்வலத்தில் கைக்குழந்தைகளுடன் தாய்மார், சிறுவர், இளைஞர், முதியோர் என சகல வயதினரும் தொழிலாளர், விவசாயிகள், மாணவர், மகளிர், புத்திஜீவிகள் எனப் பெருந் திரளான மக்கள் நாம் எல்லோரும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு அணிதிரண்டு இறுதி வெற்றி எமக்கே என்ற இறுமாப்புடன் பங்கு கொண்டனர்.

இன ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம் முதலிய சகல ஒடுக்கு முறைகளையும் உடைத்தெறிந்து சமதர்ம தமிழீழத்தை உருவாக்கும் இந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் நாமெல்லோரும் ஒன்று திரண்டிருக்கிறோம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வழி காட்டுதலில் முன்னெடுத்துச் செல்லப்படும் எமது தேச விடுதலைப் போராட்டத்தில் தலைமைச் சக்தி தொழிலாள விவசாயிகளே என்பதை மேதின எழுச்சி ஊர்வலத்தின் மூலம் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச ரீதியில் எமது போராட்டத்தினை பிரச்சாரப் படுத்தவும், சிறீலங்கா முதலாளித்துவ இனவெறி அரசின் முகத்திரையைக் கிழித்துக் காட்டவும், போலி இடதுசாரிகளை அம்பலப்படுத்தவும் மேலும் முற்போக்கு நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நிலைமைகளை தோற்றுவிக்கவும் இம்மேதின எழுச்சி ஊர்வலம் மிகவும் அவசியமானதே.

ஆனால் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டதுடன் போராட்டத்திற்கான எமது பங்களிப்பு முடிவடைந்து விடவில்லை. சமதர்ம தமிழீழம் அடையப்படும்வரை நாம், ஒவ்வொருவரும் அதற்கான செயல்முறைகளில் எம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். போராட்டத்தின் சகல பரிமாணங்களிலும் அவரவர் தமது இயல்புக்கேற்ப தமது பங்களிப்பினைக் கொடுக்க வேண்டும் வேறுயாரும் எமக்கு விடுதலைபெற்றுத் தருவர் என எண்ணியிராது எமது விடுதலையை நாமே வென்றெடுப்போம். அதுவே உண்மையான விடுதலையாக இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போலிகளுக்கு... "சே"யின் பதில்

தமிழீழ மக்களின் ஆதரவுடனும் பங்களிப்புடனும் வெற்றிகண்டு வரும் தமிழீழ விடுதலைப்போரை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னணிப்படையாக நின்று வழிநடத்தி வருகின்றனர். இந்நிலையில் இப்போராட்டத்தைப் பயன்படுத்தி இலாபம் காணவிரும்பும் சில போலிப் புரட்சிவாதிகளும் சமுதாய விரோதிகளும் மிகவும் கீழ்த்தரமாக விடுதலைப் புலிகளுக்கெதிராக பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தம்மை பெரும் தத்துவவித்தகர்களாக காட்டி மக்களைக் குழப்பமுற்படுகின்றனர். இவர்களின் முகத்திரையைக் கிழிக்க இவர்களின் விமர்சனங்களிற்குப் பதிலாக உலகப் புரட்சியாளன் சேகுவேராவால் எழுதப்பட்ட "கொரில்லாப் போராட்டம்" என்ற நூலின் "கொரில்லாப் போராட்டத்தின் சாராம்சம்" எனும் அத்தியாயத்திலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

**விமர்சனம்:** விடுதலைப்புலிகள் அமெரிக்கத்தயாரிப்பு ஆயுதங்கள் வைத்துள்ளனர் எனவே இவர்கள் சி.ஐ.ஏ. (C.I.A. ஏஜன்டுகள்.

**சேகுவேரா:** கொரில்லாப் படைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான வளமாக அமைவது எதிரியின் ஆயுதங்களே. எதிரியால் பாவிக்கப்படும் ஆயுதங்களையே நாமும் [illegible]தெடுப்பது முக்கியம். ஏனெனில் கொரில்லா அணிக்கு மிகவும் தேவைக்குரியதான பிரச்சினைக்குரியதான வெடிகுண்டு, ரவைகள் போன்ற ஆயுத தளவாடங்களை எதிரியிடமிருந்தே நாம் பெற்றெடுக்க முடியும்.

**ஆசிரியர் குறிப்பு:** எம்மால் தடைசெய்யப்பட்ட ஏனைய இயக்கங்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒன்றேனும் அவர்களால் விலைக்கு வாங்கப்பட்ட ஆயுதமல்ல எல்லாமே அவர்களிற்கு இனமாகக் கொடுக்கப்பட்டவையே ஆனால் இவர்கள் போராட்டத்திற்கு எனக் கூறி உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் மக்களிடமிருந்து பெருமளவு பணம் சேகரித்தவர்கள், வங்கிகளிலும் கோயில்களிலும் மக்களிடமும் பெருந்தொகை கொள்ளையிட்டவர்கள். இப்பணத்தை என்ன செய்தார்கள்? ஏன் போராட்டத்திற்கு பயன்படுத்தவில்லை? என மக்கள் கேட்டு விடுவார்களே என்ற பயத்தில் மக்களைத் திசை திருப்புவதற்காகவே இத்தகைய பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

**விமர்சனம்:** விடுதலைப்புலிகள் இராணுவத்தைத் தாக்கிவிட்டுத்தப்பித்துக்கொள்கின்றனர் மக்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதில்லை.

**சேகுவேரா:** ஆரம்பத்திலிருந்தே அழிவிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வது ஒரு கொரில்லாப் போர்வீரனின் முக்கிய கடமையாகிறது. காலப்போக்கில் கொரில்லா அணி அங்கத்தவர்கள் இந்தப் போராட்ட வாழ்க்கையை இலகுவில் தழுவிக்கொள்வர். எதிரியை தாக்குவதும் தப்பித்துக் கொள்வதும் நாளாந்த நடவடிக்கையாக மாறும் பட்சத்தில் போராட்டம் இலகுவானகைங்கரியமாகிவிடும். போராட்டம் இக்கட்டத்தை அடையும் போது அதாவது எதிரி அணுக முடியாத நிலையில் போராளிகள் தம்மை நிலைப்படுத்திக் கொண்டபின் அல்லது எதிர் கொண்டு தாக்கத் தயங்குமளவுக்கு போர் சக்திகளை அணி திரட்டிக் கொண்டபின் கொரில்லா வீரர்கள் எதிரியைப் படிப்படியாக பலவீனப்படுத்தும் போர்முறையைக் கையாளவேண்டும்.

இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். போராட்டப் பிரதேசத்திலுள்ள எதிரி இராணுவத்தினரை தூங்கவிடக்கூடாது. அவர்களது தளங்கள் தொடர்பாகத் தாக்கப்பட்டு அழிக்கப்பட வேண்டும். வட்டவடிவில் சதா சூழப்பட்டதாக எண்ணி அவர்கள்பீதியடையும்நிலையை உருவாக்க வேண்டும்.

**ஆசிரியர் குறிப்பு:**

எமது போராட்டம் தாக்குதல் தப்பித்தல் என ஆரம்பித்து படிப்படியான பரிணாம வளர்ச்சியூடாக நேரடி யுத்தம் என்ற நிலையை அடைந்து இன்று இராணுவத்தைச் சுற்றி வளைத்து முகாம்களிலேயே முடக்கி வைத்திருக்குமளவுக்கு வளர்ந்துள்ளது. இன்னும் எமது மண்ணிலிருந்து முழு இராணுவத்தையும் விரட்டியடிக்கும்வரை போராட்டம் தொடரும். அன்று எம்மை விமர்சித்த புத்தகப் பூச்சிகளான போலிப் புரட்சிவாதிகள் இன்னும் கூட தாக்குதல் தப்பித்தல் எனும் நிலையிலேயே உள்ளனர்.

நாம் மக்கள்மீது அக்கறை கொள்ளாதவர்கள் அல்ல. மக்களுக்காகவே எமது போராட்டம். இன்று எம்மில் 524 பேர் எம்முடன் ஒன்றாகப் பழகியவர்கள், ஒன்றாகச் சாப்பிட்டு ஒன்றாகப்படுத்து ஒன்றாக வாழ்ந்தவர்கள் தம்முயிரை தியாகம் செய்துள்ளனர். நாளை யார் யாரோ? இவை யாருக்காக? பருத்தித்துறையில் ஒரேயொரு காவல் நிலையத்தில் (Centry point) மட்டும் இதுவரை 23 பேர் இன்னும் அவ்விடத்தில் நாம் காவல் நிற்கிறோம் எமதுயிரையும் கொடுக்கத் தயாராக ஏன்? சிந்தியுங்கள். போலிகளின் உள்நோக்கத்தைப்புரிந்து கொள்ளுங்கள் உண்மைப் போராளிகளுடன் அணிதிரளுங்கள்.

# சுதந்திரமும் நாட்டுப்பற்றும்

சுதந்திரம் என்றால் என்ன? அது ஒரு மாபெரும் சக்தி. கண்ணுக்குத் தெரியாத ஆனால் அனுபவிக்கக் கூடிய ஒன்று. [illegible] டையவனாக, மனித நேயம் உடையவனாக இருக்க வேண்டுமானால் அவன் சுதந்திரமுள்ளவனாக இருக்க வேண்டும்.

எமிலி, சமுதாய ஒப்பந்தம் போன்ற நூல்களைப் படைத்து பிரான்சு நாட்டில் சுதந்திர உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்த ரூசோ என்னும் அறிஞர் கூறுகின்றார்.

ஒரு மனிதன் தன்னுடைய சுதந்திரத்தைத் துறந்து விட்டானென்று சொன்னால் அவன் தன்னுடைய மனிதத் தன்மையையும் துறந்து விட்டான் என்று அர்த்தம். அது மட்டுமல்ல மானிட இனத்தின் ஓர் அம்சத்தினன் என்ற முறையில் அவனுக்கு ஏற்பட்டிருக்கிற உரிமைகளையும் கடமைகளையும் கூடத் துறந்துவிட்டான் என்றே கொள்ள வேண்டும். அவனிடத்தில் எந்தவிதமான நற்குணங்களையும் கொண்டு புகுத்தி அவனுடைய மனிதத் தன்மையை திருப்ப முடியாது. சுருக்கமாகச் சொன்னால் அவன் மனிதனே அல்ல.,'

அதனால்தான் "முழந்தாளிட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும் நின்று கொண்டு இறப்பதே மேல்" என்ற உறுதிப்பாட்டினைக் கொண்டு இருந்தவர் மராட்டிய மன்னர் சிவாஜி.

உலகிலுள்ள எந்த மனிதனும் சுதந்திரமாகவே இருக்க விரும்புகிறான். ஆனால் இனமே அடிமைப்பட்டு இருக்கும் போது சுதந்திரத்திற்கு எங்கே போவது? எனவே முதலில் இனவிடுதலை வேண்டும். விடுதலை பெற்ற இனத்திற்கு சொந்த நாடும் வேண்டும்

சொந்த நாடாக இருந்தாலும் அது அடிமை நாடாக இருந்தால் அதில் வசிப்பதை விட நரகத்தில் வாழ்வது மேலானது என்பது உண்மையே.

தாய் நாடு என்று சொல்லும்போதே நம்மிடத்தில் வீர உணர்ச்சி பெருகுகின்றது. தாய்நாட்டை நேசிப்பது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமை.

தேசபக்திஎன்பது யாரோ ஒரு மனிதனுக்கு மாத்திரம் மொத்தமாக அமைகின்ற பண்பு என்று யாரும்நினைத்தல் கூடாது. அது ஒவ்வொரு மனிதனிடத்தும் இயற்கையாக அமைந்துள்ள பிறவித்தன்மை

அதனால் சொந்த நாட்டுக்காக துயரப்படுவது, துன்பத்தினை அனுபவிப்பது, மரணமடைவது எல்லாமே புனிதமான செயற்பாடுகள் எனப்படுகின்றன.

ஒரு லட்சியத்தை நேசிக்கின்றேன் என்பதற்கு எது அடையாளம் என்றால் அதற்காக உயிரை விடக்கூட சித்தமாக இருக்கின்றேன் என்பது தான். எனவே நாட்டு விடுதலைக்காக உயிரினை இழப்பது மிகப் பெரிய தியாகமாகும்.

குளிர்ந்த நிழலில் இருந்து கொண்டு எங்கே வெய்யில்? எங்கே வெய்யிலின் வெம்மை? என்று கேட்பது போல இன்னமும் சிலபேர் நம் மத்தியில் உள்ளனர்.

சந்தர்ப்ப வாதங்களினாலும், பொருளாதார நலன்கள் வசதியாக இருக்கின்ற படியாலும் இன்றைய எமது பொதுவான பிரச்சினைகளின் அடித்தளத்தை புரிந்து கொள்ள விரும்பாது இன உணர்வோ, மொழி உணர்வோ நாட்டுப் பற்றோ இன்றி போராட்டத்தில் எவ்வித அக்கறையுமின்றி மிகவும் சுயநலவாதிகளாக காணப்படுகின்றனர்.

உலக வரலாற்றிலேயே அத்தகையவர்கள் எப்போதும் தங்கள் வர்க்க நலன்களுக்கே முன்னுரிமை அளிப்பவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும்.

உயர்ந்த லட்சியமில்லாத அந்த லட்சியத்திற்காக உழைக்காத வாழ்க்கை, வாழ்க்கை அல்ல. எனவே எங்கள் இலட்சியத்தை உறுதிப்படுத்தவும், உழைக்கவும் முன்வோமாக.




**TIME (16 - 2 - 1987):** சிறிலங்கா அரசு ஆடம்பரமாகக் கொண்டாடிய 39 வது சுதந்திர தினச் கேளிக்கை நிகழ்ச்சிகளில் பெருமளவில் சிங்கள மக்களே கலந்துகொள்ளவில்லை. மேலும் தமிழீழ விடுதலைப் புலிகட்கும் இராணுவத்திற்குமிடையே போர் நீடிக்கிறது. இந்நிலையிலோ ஸ்ரீலங்கா அரசு மிகப் பெரிய இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழர் வாழும் பகுதிகளைக் கைப்பற்ற முயல்கிறது. ஆனால் விடுதலைப் புலிகளோ மக்களோடு பரிபூரணமாக ஒன்றுகலந்து செயற்படுவதால் இவ்வாறான காரியங்களால் பெரும்பான்மையான மக்களையே கொன்று குவிக்க முடியும். மேலும். வடபகுதியை தமது பரிபூரண கட்டுப்பாட்டினுள் வைத்துள்ள விடுதலைப் புலிகளோ தமது உயிரைக்கூட அர்ப்பணித்துஇறுதி வரை இலட்சியத்திற்காக போராட சித்தமாயிருப்பதால் எந்தவாரு அரசின் நடவடிக்கைகளும் இலகுவான தொன்றல்ல. 1983ல் சிறிய அளவிலிருந்த விடுதலைப் புலிகளோ இப்போது ஆயிரக்கணக்கான சுதந்திரப் போராட்ட வீரர்களுடன் பாரியவளர்ச்சியடைந்து இலட்சக்கணக்கான மக்களின் ஆதரவுடன் அனைத்து இராணுவ முகாம்களையும் கட்டுப்படுத்த மக்களைப்பாது காத்து வருகின்றார்கள் இறப்பு வருமென்று உறுதியாகத் தெரிந்த போதிலும் விடுதலைப் புலிகள் மிக மிக சந்தோசத்துடனும், உற்சாகத்துடனுமேயே போராடுகின்றனர். மேலும் தமது சொந்த முயற்சிகளினால் பல இராணுவத் தளபாடங்களை உள்ளூரில் தயாரிப்பதிலும் வெற்றியீட்டியுள்ளார்கள்.

**ASIA WEEK (8 - 2 - 1987):** சிறிலங்கா அரசு திட்டமிட்டு எரிபொருள் தடை, பொருளாதாரத்தடைகள் மூலம் தமிழ் மக்களை மிகக் கஷ்டநிலைக்கு ஆளாக்கி வருகின்றது எத்துணைதான் கஷ்டங்கள் வந்தபோதும் தமிழ் மக்கள் அவர்களால் செல்லமாக "பெடியங்கள்" என்று அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பக்கமே.

**INDIA TODAY 15-2-1987):** சிறிலங்கா அரசு திட்டமிடப்பட்ட எரிபொருள், பொருளாதாரத் தடைகள் மூலம் கஷ்டப்படுத்துவதுடன் வைத்தியசாலைகட்கு தேவையான உயிர்காக்கும் மருந்துகள், பிராணவாயு உருளைகள்,...... என்பனவற்றையும் அனுப்பாது உள்ளது. இக்கட்டான நிலையில் விடுதலைப்புலிகளே மக்களைப்பாது காத்து வருகின்றார்கள். எனவே எந்தவொரு தமிழ் மகனும் இந்நிலையில் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடாத்துமாறு தமிழீழ விடுதலைப்புலிகளைக் கேட்கப்போவதில்லை மேலும் இக்கட்டான நிலைதொடரின் தமிழ் மக்கள் இந்நெருக்கடிகளை வென்றெடுக்க தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒன்றிணைந்து மிக மிக நெஞ்சு உறுதியுடன் போராடி அரசையே திருப்பி ஆட்டங்காணச் செய்வார்கள்

**FRONT LINE (12- 12- 1986):** பெரும்பான்மையான தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத எந்தவொரு அரைகுறைத் தீர்வுகளையும் எந்த மிகப்பெரிய சக்திகள் மூலமும் திணித்து நிரந்தரமாக தீர்த்துவிட முடியாது. இது மேன்மேலும் சிக்கலாகவே அமையும்

**மக்கள்----** 6 ம் பக்க தொடர்ச்சி


கின்றன. இந்த அநியாயத்தை நீங்கள் கவனிக்க மாட்டீர்களா, பிள்ளைகள் தாங்கள் உயிரியல் விஞ்ஞானம் படிப்பதா? அல்லது பௌதிக விஞ்ஞானம் படிப்பதா? அல்லது வணிகத் துறையில் படிப்பதா? அல்லது கலைத்துறையில் படிப்பதா அல்லது திரும்ப சாதாரண தரம் கற்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க முன்னரேயே இந்தத் தனியார் கடைகள் ஆரம்பமாகின்றன. தற்காலப் போட்டிப் பரீட்சை முறையில் பிரத்தியேகக் கவனிப்பை முற்றாக நிராகரிக்கமுடியாது. ஆனாலும் அதற்குமொரு ஒழுங்கு திட்டம் இருக்க வேண்டும். குறிப்பிட்ட 3 நாட்களுக்கு மட்டுமே எந்தக் கடையும் திறக்கப்படலாம். மற்றைய நாட்களில் மாணவர்கள் தாமேவீட்டில் இருந்து ஆழச் சிந்தித்து கடைகளில் வாங்கிய சரக்கைத் திருப்பிப் பார்க்கவேண்டும். பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சமூகப் பங்களிப்பு உண்டு. சமூகத் தொடர்பில்லாதவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் விடுதலை பெற்று பயனில்லை

த. மதியழகி
திருநெல்வேலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழீழ மக்களின் பொருளாதாரம் பெருமளவு விவசாயத்திலேயே தங்கியுள்ளது இதனால் இத்துறைசார்ந்த மக்களின் உற்பத்திகளும் தொழில் வாய்ப்புக்களும் விவசாயத்துறை சார்ந்ததாகவே உள்ளது. இத்துறை சார்ந்த மக்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க விவசாயத்துறையும் அபிவிருத்தியடைதல் வேண்டும். அப்போதுதான் இத்துறைசார்ந்த மக்களின் வேலை வாய்ப்பும், வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்படும். வேலை வாய்ப்பையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதென் பதுதனித்தனி விவசாயிகளின் செயற்பாட்டுடன் மாத்திரம் தொடர்புடையதல்ல. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும் அரசின் நடவடிக்கைகளோடு நெருங்கிய தொடர்புடையது எனவே அரசு மக்களுடைய நலனில் அக்கறையுடையதாயிருத்தல் வேண்டும். தற்போதைய யுமே இருந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளும் உண்டு. அத்துடன் வறள்நிலமும் கடற்கரையும் மனிதவாழ்க்கைச் சூழலாக இருக்கும் போது விவசாயமும், மீன்பிடியும் முதன்மை பெறுவது வியப்புக்குரியதொன்றல்ல. இவ்விரு தொழில்களும் இவைசார்ந்த தொழில் வாய்ப்புக்களையும் மேற்குலகார் எங்களுக்கு அறிமுகப்படுத்தவில்லை. எம் மக்களின் மரபுசார்ந்த தொழிற்துறையாகவே உள்ளது. இந்நிலையில் மீன்பிடி சார்ந்த மக்களின் வாழ்க்கைத்தரமும் வேலைவாய்ப்பும் உயர மீன்பிடித்துறை அபிவிருத்தியடைதல் வேண்டும். இதற்கானவசதிகளை தனித்தனியாகமீன்பிடிப்பாளர்கள் மேற்கொள்ள முடியாது. இங்கும் ஒரு மக்கள்நலன் நோக்கிய புரட்சிகர அரசஸ்தாபனம் தேவையாக உள்ளது.


தற்போதைய நிலையில் இப்பகுதி மக்களின் வாழ்க்கை மிகக் கீழ்நிலைக்கு தள்ளப்பட் ஸ்தாபனங்கள், அரச சேவைத் துறை ஸ்தாபனங்கள் போன்றவற்றில் வேலைவாய்ப்பைப் பெற்றோர் இப்பகுதி மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது மிகச்சிலராகவே உள்ளனர். இத்துறைகளிலுள்ளோர் நிரந்தர மாதாந்த வருமானத்தைப் பெறுபவர்களாயிருப்பதனால் இவர்கள் வாழ்க்கைத் தரம் அடிக்கடி தளம்புவதில்லை. இதனால்விவசாயம்மீன்பிடித்துறையிலுள்ளோரும், நிரந்தரமற்ற வருமானத்தை வேறு துறைக மிகக்குறைவான மேற்குறிப்பிட்ட தொகையினரே தமிழீழ மக்களின் பொருளாதாரம்தெற்கிலே தங்கியுள்ளது என்ற கருத்துருவம் கொடுத்து வருகின்றனர்.

இது உண்மைக்குப் புறம்பானதே.

மேற்குறிப்பிட்டவர்களையும் தவிர்த்து இனக்கலவரங்களினால் தம்வர்த்தக முதலை இழந்து தெற்கிலிருந்து துரத்தப்பட்டோரும் அரச கெடுபிடிகளைக் காரணங்காட்டி மேற் குலகில் அகதிகளாகச்சென்றோர் இன்று வடகிழக்கின் வருமானத்தை மேற்குலகில் கூலித் தொழிலாளராயிருந்து உழைத்து அனுப்புகின்றனர். இவ்வருமானம் முன்னைய காலங்களோடு ஒப்பிடும்போது தெற்கிலிருந்து வரும் வருமான த்தை விடக் கூடியதாயிருந்தாலும் இவ்வருமானம் பெறுவோரும் அந்நாடுகளில் நிரந்தரமற்ற வருமானத்தையே பெறுகின்றனர். இவ்வருமானமும் இப்பகுதிக்கு நிரந்தர வருமானமல்ல. எனவே தொகுத்து நோக்கும்போது எம்மக்களின் பொருளாதாரத்தை சுய சார்பாகக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் விவசாயம் மீன்பிடித்துறைகள் அபிவிருத்தியடையச் செய்தல் வேண் டும். அத்துடன் சந்தைப்படுத்தல், பங்கீடு தொடர்பாக இவ் விவசாயத்துறை மீன்பிடித் துறைப் பொருட்கள் சார்ந்த கைத்தொழில் துறையையும் அபிவிருத்தியடையச் செய்தல் வேண்டும். இதுவே இன்றைய தேவையாகும்.



திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியில் விடுதலைப்புலிகள்



தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதார அழிப்பு

இலங்கை அரசினால் வடக்கிலும், கிழக்கிலும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் திட்டமிட்டு பல ஆண்டுகளாக பல்வேறு நடவடிக்கைகள் மூலம் எமது பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டு பாழடிக்கப்படுகின்றது.

இதனால் இப்பகுதிக்கான மக்களின் வாழ்வினை உத்தரவாதப்படுத்த மக்கள் நலன்நோக்கிய புரட்சிகர அரசஸ்தாபனம் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது.

விவசாயத்துறை தவிர்ந்த அடுத்து முக்கியமாக மீன்பிடித் துறை உள்ளது. தமிழீழத்தில் நீண்ட கடற்கரை ஓரங்கள் இருப்பதால் மீன்பிடிக்கான வாய்ப்புகளும் வளங்களும் உண்டு. இப்பகுதிகளின் நீண்டகால உற்பத்தித் துறைகளாக விவசாயமும், மீன்பிடி டதற்கு மக்கள் நலன்நோக்கி சிறீலங்கா அரசு இல்லாமையே காரணமாகும். இப்பகுதியின் மீன்பிடியாளரின் தொழில்வாய்ப்பையும் வருமானத்தையும் ஏதோ காரணங்களுக்காக ஒரு இரவில் பத்திரிகைகளுடாகவும் வானொலி தொலைக்காட்சிச் செய்திகளுடாகவும், வெறும் செய்திகளூடாகவும் நிறுத்த முடியுமானால் இம்மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கு உத்தரவாதமளிப்பது யார்? அதற்கான புரட்சிகர அரசை உண்டாக்குவது இப்பகுதி மக்களின் அவசியமான கடமையல்லவா?

விவசாயம், மீன்பிடி தவிர்ந்த ஏனைய தொழிற்துறைகள் இப்பகுதி மக்களில் பெரும்பாலானோரை உள்ளடக்கவில்லை. குடிசைக் கைத்தொழில், சிறுகைத்தொழில் அரச கூட்டுத்தாபனங்கள், நிர்வாக ளினூடு பெறுவோரும் நிரந்தர வருமானத்தையும், தளம்பலற்ற வாழ்க்கைத் தரத்தையும் பெறுவதற்காக இத்துறை நாடி வருவதுண்டு. அவர்கள் தம் கல்விச் சான்றிதழ்களை அதிகமாகப் பெற்று அதனூடாக இத்துறையில் வந்துசேர விரும்புவர். இது இயல்பானதே. இத்துறையிலுள்ளோர் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினராக இருப்பதால் இவர்கள் மேல்தட்டு வர்க்கத்துடன் சேர்வதற்காக முயற்சிப்பதோடு தம் நலனுக்காகவே அரசும் ஏனைய நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் எனக் கருதிக்கொள்வர். இவர்களின் வருமானம் சிறிலங்காவிலிருந்து வருவதால் தென்பகுதியுடன் பகைமை பாராட்டக் கூடாது. அது எமது பொருளாதார நலன்களை பாதித்து விடுமென அடிக்கடி கூறுவர்.

## அரசியற் சொற் பதங்களும் கருத்துக்களும்

### 1.தேசவிடுதலைப் புரட்சி:-

தேசவிடுதலை இயக்கத்திலிருந்து வளருகின்ற புரட்சி. அந்நிய ஆதிக்கத்தை ஒழித்து தேசத்துக்கு சுயேச்சை வாழ்வு கிடைக்கச் செய்தல்; தேசிய இன, காலனி ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் அகற்றுதல்; தேசங்களது சுயநிர்ணய உரிமையைச் செயல்படவைத்தல்; தேசிய அரசை நிறுவுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நடைபெறும் புரட்சி ஆகும்.

## எனது நண்பனைப் பற்றி....

எனது நண்பனைப்பற்றி
எமது மண்ணிலே அதிகம் பேசுகின்றனர்.
எப்படி அவன் சென்றான்
எப்படி அவன் திரும்பவே இல்லை.
எப்படி அவன் தன் இளமையை இழந்தான்

துப்பாக்கி வேட்டுக்கள்
அவன் மார்பையும் முகத்தையும் நொருக்கின
தயவு செய்து மேலும் விவரணம் வேண்டாம்
நான் அவனது காயங்களைப் பார்த்தேன்

அதன் பரிமாணங்களைப் பார்த்தேன்
நான் நமது ஏனைய குழந்தைகளைப் பற்றி எண்ணு
கிறேன்
குழந்தையை இடுப்பில் ஏந்திய
ஒவ்வொரு தாயையும் பற்றி எண்ணுகிறேன்

அன்புள்ள நண்பனே!
அவன் எப்போது வருவான் என்று கேட்காதே
மக்கள் எப்போது கிளர்ந்தெழுவார்கள்
என்று மட்டும் கேள்.

"மஹ்மூட் தர்வீஷ்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தியாகவேள்வி

(உண்மைச்சம்பவம்)

அவசர அவசரமாக கதவைத்தட்டும் ஓசை.

வீட்டின் உள்ளே தனிமையில் இருந்த அவள் திகிலுடன் யாரது எனக் கேட்டாள்.

''நான் ஒரு வழிப்போக்கன் தயவுசெய்து இரவு தங்குவதற்கு உதவிசெய்யுங்கள்.''

''என்ன இது இந்த இரண்டும் கெட்டான் வேளையில்'' என்று முணுமுணுத்தவாறே அவள் லேசாகக் கதவைத் திறந்து பார்த்தாள்.

''யார் நீங்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு? அவள் கேட்டாள்.

பக்கத்து கிராமத்தில் இருந்து வருகிறேன் அம்மா இன்று இரவு மட்டும் எனக்கு இடம் அளியுங்கள்'' வெளியே நின்ற அந்தப் பெரியவர் கேட்டுக் கொண்டார்.



ஒருமுறை அவரையே ஏற இறங்கப் பார்த்தாள் நரைத்த முடி, பஞ்சடைந்த கண்கள். ஆனால் அவரின் கண்களில் ஓர் ஒளி.

வந்தவரின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே உள்ளே வாருங்கள் ஐயா என்று அன்பாக அழைத்தாள் அந்தத் தாய்.

வெளியே சென்ற கணவர் வந்தால் என்ன சொல்லுவாரோ என்ற கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்தது. எதற்கும் முதியவரான இந்த வழிப்போக்கருக்கு இடமளிப்பதில் தவறில்லையென அவள் மனம் எண்ணி இடம் கொடுத்தது.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவரை அமரச் சொல்லி விட்டு அவள் அடுக்களைக்குள் சென்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவள் மீண்டும் கையில் ஒரு தட்டுடன் தோன்றினாள். அதில் சில சப்பாத்திகளும் குடிநீரும் பாலும் இருந்தன. சாப்பிடுங்கள் ஐயா இப்போதைக்கு இவை மட்டும்தான் இருக்கின்றன என்றாள்.

அவர் நன்றியுடன் அவளை ஒருமுறை பார்த்துவிட்டு உண்ணத்தொடங்கினார். பல நாட்கள் பட்டினியாக இருந்து களைத்துப்போன அவரால் அதிகமாக உண்ணமுடியவில்லை.

இது அந்த இல்லத்தரசியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது ''உங்களைப் பார்த்தால் கடுமையான பசியால் பாதிக்கப்பட்டவரைப் போலத் தெரிகின்றது. ஆனால் நீங்கள் நன்றாகச் சாப்பிடவில்லையே என்று ஆதரவுடன் கேட்டாள்.

பெரியவர் அவளை நிமிர்ந்து பார்த்தவாறே ''மகளே இதற்குப் பதிலளிப்பதானால் ஓர் அதிர்ச்சிதரும் பயங்கரமான கதையைத்தான் கேட்க நேரிடும் என்றார்.

அவளோ சொல்லுங்கள் என்று ஆவலோடு அவரை உற்று நோக்கினாள்.

''இந்தப் பாரததேசத்தை அதாவது எமது தாய்நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் வெள்ளையரின் அரசு என்னைத் தேசத்துரோகி என கூறுகின்றது. ஆனால் என் நாட்டு மக்களோ என்னை தேசபக்தனாகவும் விடுதலை வீரனாகவும் மதிக்கின்றார்கள்.

வெள்ளையன் அரசு எனது தலைக்கு விலைபேசி சன்மானமும் அளிக்கத் தயாராய் இருக்கின்றது. ஆனால் நான் செய்த குற்றம் எனது நாட்டு மக்களுக்கும் எனது நாட்டிற்கும் சுதந்திரம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்வதும் விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதும்தான். என்னுடைய உண்மை நிலையை எடுத்துச் சொன்னால் யாரும் எனக்கு உதவப் பயப்படுவார்கள். காரணம் அவர்களுக்கும் ஆபத்து வந்துவிடும் என்று. இலைகளையும் காய்களையும் உண்டு பசியை அடக்குகிறேன். நான் அனுபவிக்கும் கஷ்டங்கள் பெரிதல்ல. அம்மா எங்கள் அன்னை பூமி விடுதலை பெற வேண்டும். அதுவரை என்ன கஷ்டங்கள் என்றாலும் அனுபவிக்கத் தயாராக உள்ளேன். எனது மகளைப்போல நீ இருந்தாலும் ஓர் தாயின் பரிவு காட்டி என்னை உபசரித்திருக்கிறாய். உன் பரிவை என்னால் மறக்கமுடியாது என்று நன்றிப் பெருக்குடன் கூறினார் முதியவர்.

சிறிது ஆகாரம் உள்ளே போனதாலோ என்னவோ அவர் சிறிது தெம்பானார். தூக்கம் லேசாக அவரது கண்களை தழுவிக்கொள்ள ஆரம்பித்தது.

''ஐயா எல்லாம் சொன்னீர்கள் உங்கள் பெயரை மட்டும் எனக்கு சொல்லவில்லையே'' என்று அவள் ஆவலோடு கேட்டாள்.

''நான்தானம்மா தலைக்கு விலைபேசப்படும் 'நானாசாகிப்'' என்றார் பெரியவர்.

அவள் அதிர்ச்சி அடைந்தாள். தன்னையே நம்பமுடியாத நிலை தெய்வமே தனக்கு முன்னால் வந்துகாட்சி தருவது போன்ற ஒரு பிரமை. தாய்நாட்டின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்த மகானிற்கு ஒரு வேளை உணவாவது கொடுப்பதற்குத் தனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பேரானந்தமடைந்தாள்.

அவர் அன்று இரவு தங்குவதற்கு அடுத்த அறையில் அவருக்கு அவள் ஏற்பாடு செய்தாள். களைப்பு மிகுதியால் அவர் சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரையில் ஆழ்ந்தார் அவள் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள்,

சுமார் ஒருமணிநேரமிருக்கும், தன்னை யாரோ உலுக்கி எழுப்புவதை உணர்ந்தார் நானாசாகிப் எழும்புங்கள் எழும்புங்கள் தயவுசெய்து இந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள் என அவசரப்பட்டாள் அந்தத் தாய். ஏதோ ஆபத்து வந்தது என உணர்ந்த பெரியவர் வாரிச் சுருட்டிக்கொண்டு எழும்பினார். அவசரமாக வெளியே சென்றபோது கதவருகே தரையில் கத்திக்குத்துப் பட்ட நிலையில் ஒருமனிதன் இரத்த வெள்ளத்தில் மரண வேதனையுடன் துடிதுடித்துக் கொண்டு இருப்பதைக் கண்டார். அவர் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. அடுத்தகணம் அவருடைய பார்வை அந்தப் பெண்மீது சென்றது. அவளது கையில் இரத்தக்கறையுடன் ஒரு பெரிய கத்தி

அவருக்குத் தன்னுடைய கண்களையே நம்ப முடியவில்லை

''என்ன இது, நீதானா இந்தக் கொலையை----? அவர் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குள் அவள் முந்திக்கொண்டாள்.

''ஆம் நான் தான் ஐயா இந்தக் கொலையைச் செய்தேன்''

தலையை கம்பீரமாக உயர்த்தியபடி நிமிர்ந்து துயரமோ குற்ற உணர்வோ திகிலோ இல்லாமல் அவள் கூறினாள்.

''இந்த அற்பப்பிறவி எனது கணவன்தான். ஆனால் தங்களைக் காட்டிக் கொடுக்க முற்பட்ட துரோகி, கயவன். பணத்துக்காக தங்களையே காட்டிக் கொடுக்க முனைந்த நயவஞ்சகன்.

கல்லாக சமைந்துவிட்ட நிலையில் அந்த மாவீரன் இருக்க அவள் தொடர்ந்து சொன்னாள்

பொலிஸ்நிலையம் சென்று தகவல் கொடுக்க முயன்றான். எவ்வளவோ நான் சொல்லிப் பார்த்தேன். எமது நாட்டின் சுதந்திரத்தின் தேவையை அன்னிய அரசின் கொடுமையை எல்லாமே சொல்லிப் பார்த்தேன் பயனில்லை. உங்கள் தலைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை சன்மானமாகப் பெறுவதே அவன் நோக்கமாக இருந்தது. என்சொந்த மண்ணையும் மக்களையும் அன்னியரிடம் இருந்து மீட்கப் புறப்பட்ட ஒரு தியாகியைக் காட்டிக் கொடுத்த பழி என்மீது வரக் கூடாது என்பதற்காக எனது கணவனையே கொன்று விட்டேன். என் மாங்கல்யம் அழிந்தாலும் என்மரபு அழியக் கூடாது ஐயா எனக் கூறி அழுதாள்.

வீரப்புரட்சியாளன் நானாசாகிப் அந்த வீராங்கனையின் கால்களில் விழுந்தார். பெண்மைக்கு இவ்வளவு வல்லமையா? என்று வியந்த அவர் வீரமகளே உலக சரித்திரத்தில் உனது தியாகத்திற்கு ஈடே கிடையாது. இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் தலைகள் உனக்கு முன்னால் கவிழ்கின்றன. உனது கால் தூசுக்கு முன்னால் நான் எம்மாத்திரம்.

அவரது தொண்டை கம்மியது. குரல் தழுதழுத்தது)

(குறிப்பு:- நானாசாகிப் 1858 இல்நடைபெற்ற முதல் இந்திய விடுதலைப்போரில் கலந்து கொண்டு புகழ்பெற்ற வீரப்புரட்சியாளர்....

## ''பெருங்''குடிகள்!

பேசித்திரிந்த பெருங்குடிகள் -
இன்று
ஏசித்திரியுதுகள் - ஏனென்றால்
அவர்களின்
கரை போட்ட மூன்று முழத்தை
நடுரோட்டில் அவிழ்த்தவர்கள்
இவர்கள் தானாம்!

## முரண்பாடுகள்

### தொண்டமான்

இனப்பிரச்சினை விவகாரத்தீர்வை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளைச் சார்ந்ததே. [உதயன் 21- 11 86]

வடக்குக்கிழக்கில் தீவிரவாதிகட்கு எதிரான அரசின் இராணுவ நடவடிக்கை நியாயமானதே. [வீரகேசரி 6- 3 87]

★ ★ ★

ஐக்கிய தேசியக்கட்சியில் நம்பிக்கை இல்லாததாலேயே வடபகுதி இளைஞர்கள் போராடி ஆயிரக்கணக்கில் உயிர்த்தியாகம் செய்கிறார்கள். [வீரகேசரி 11- 12- 86]

வடகிழக்கில் தீவிரவாதிகளின் செயற்பாடுகளை எந்த ஒரு அரசும் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. [வீரகேசரி 6. 3- 87]

★ ★ ★

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டால் மலையகத்தில் ஒரு யாழ்ப்பாணம் உருவாகும். [முரசொலி 12-2-87]

ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஜனாதிபதியாயிருக்கின்ற காலத்திலேயே நமது நாடற்றவர் பிரச்சினைக்கு முடிவு காண்பது சாத்தியம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது [தினகரன் 16- 3- 87]

★ ★ ★


தமிழர்களின் உரிமை மதிக்கப்படாமையே இன்றைய நிலைக்குக் காரணம். [தினகரன் 16- 3- 87]

அரசுக்கு ஆத்திரம் காரணமாகவே பொருளாதாரத் தடைகள். [வீரகேசரி 12- 1 87]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






### எல்லோரும் எப்போது விழிப்பார்கள்?

இன்று தமிழ் மக்கள் சகல வழிகளிலும் அழிக்கப்பட்டு வருகின்றார்கள். சர்வதேசப் பயங்கரவாதியான அமெரிக்கா அதன் காவல்நாய்களான இஸ்ரேல், தென்னாபிரிக்கா ஆகியவற்றின் ஆதரவுடன் சிறீலங்கா அரசின் இந்த இன ஒழிப்பை எதிர்த்து விடுதலைப்புலிகள் வீரஞ்செறிந்த ஆயுதப்போராட்டத்தை நடத்துகிறார்கள். இத் தியாக வேள்வியிலே அவர்கள் சிந்தும் இரத்தம் விலை மதிப்பற்றது.

ஆனால் இத்தகையதொரு காலகட்டத்தில் தமிழ்மக்களில் சிலர் போராட்ட உணர்வின்றியே வாழ்ந்து வருகிறார்களேயன்றி இவ்விடுதலைப் போரில் தமது பங்கினை உணர்ந்தவர்களாக இல்லை. இதனை விடுதலைப்புலிகள் கவனத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் எவ்வாறு ஒவ்வொரு தமிழீழப் பிரசையினதும் பிரச்சினைகளுக்கு விடிவுதரும். சர்வதேச ரீதியாக எமது எதிரி யார்? நண்பன் யார்?

இலங்கையில் எமது எதிரி யார்? நண்பன் யார்? என்பன போன்ற பல விடயங்கள் தமிழீழ மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்.

இராணுவ ரீதியாக எவ்வாறு எமது போராட்டம் வளர்ச்சியடைந்துள்ளதோ அதேபோல போராட்டத்தின் சகல கூறுகளும் அறிவு ரீதியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

இப்பணியில் "களத்தில்" தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம்.

ச. நருஸேஸ்வரன்
கரவெட்டி

### போராட்டத்தில் பத்திரிகைகள்

தமிழீழப் பகுதியெங்குமே அரசபயங்கரவாதத்தை எதிர்கொண்டு எமது விடுதலைப் போராட்டம் பல்வேறு வழிகளிலும் முனைப்படைந்துள்ள நிலையில் எமது தேசமக்களின் அனைத்துவிடிவிற்கும் பரிபூரணமாக "களத்தில்" பத்திரிகை ஒழுங்காக வெளிவந்து எம்மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். என்பதே எம் போன்ற விடுதலையை நேசிக்கும் அனைவரினதும் பேரவா ஆகும். மேலும் எம்மத்தியிலுள்ள அநேக பத்திரிகைகள் இன்றைய நிலையிலும் கூட அரசபயங்கரவாதத்தின் கொடூரங்களை, எம்மக்களின் அவலங்களை --- தமது விற்பனையை கூட்டும் போக்கிற்காகவே பயன்படுத்துகின்றன மேலும் எமது போராட்டத்தில் மக்களை அனைத்து வழிகளிலும் வலுவூட்டாது. பயப்பிராந்தியூட்டும் பதற்றமாக்கும் வகையிலேயே செய்திகள் உ-ம் ஆக

பதுங்கு குழிக்குள் பாம்பு,
இதோ ராஜீவ் முக்கிய ----

தினேஷ் வந்துவிட்டார் -

என்ற வகையிலும் உள்ளன. இனியாவது எமது பிரச்சினைகளை மக்கள் அனைவரும் உணர்ந்து முகம் கொடுத்து எமது போராட்டம் செழிப்படைய ஏனைய பத்திரிகைகளும் உதவும் என்றே எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் மக்கள் அனைத்தையும் உணர்ந்தே செயற்பட்டு வருகிறார்கள். வருவார்கள். மேலும் தவறாது "களத்தில்" எமது மக்களின் அரசியல் நிலைப்பாடு, பொருளாதார நிலை, கலாசார மேம்பாடு பற்றிய அனைத்து ஆராய்ச்சிகளை ஊக்கமூட்டி அவற்றை முழுமையாக்கி எமது விடுதலையை வென்றெடுக்கும் பெரும் பொறுப்பை ஏற்று செயற்படுத்தும் என்பதே எமது பெரு நம்பிக்கை.

க. பவானி
கன்னாகம்

### கல்வி கடைச்சரக்கா?

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் அரசியலுக்கு மட்டுமன்றி ஏனைய விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அனைவராலும் பாராட்டப்பெறுகின்றனர். மாணவர்களின் கல்வி விருத்தியில் அக்கறையுடன் ஈடுபடும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் முன்னணி ஆசிரியர்களுக்கென ஒரு கருத்தரங்கு நடாத்தி அதில் பல கருத்துக்கள் ஆலோசனைகள் பரிமாறப்பட்டன. செயற்றிட்டங்கள் பற்றியும் பேசப்பட்டன. இவற்றில் சில நடைமுறைக்கு வந்தும் உள்ளன.

ஆனாலும் அவசியமாகத் தீர்க்கப்பட வேண்டிய குறைபாடுகள் இன்றும் உண்டு.

பாலர்களுக்கு நடாத்தப்படும் பிரத்தியேக வகுப்புக்கள்

உச்சி மத்தியான வேளையில் பிள்ளைகள் பள்ளியால் வந்ததும் வராததுமாக அவசரமாக எதையாவது வாயில் தள்ளிவிட்டு கொப்பி புத்தகங்களையும் தூக்கிக்கொண்டு பிரத்தியேக வகுப்புகளுக்கு நடந்து செல்வதைப் பார்க்க எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் நன்கு நித்திரை கொண்டு எழும்பி, நன்கு விளையாடவேண்டிய வயதில் இவ்வாறான பிரத்தியேக வகுப்புக்களுக்கு அனுப்புதல் எவ்வளவு தவறான செயல் (ஏன் ஒரு பெரும் குற்றச் செயல் என்றே கூறலாம்.) குழந்தைகளின் உள வளர்ச்சியில் தீங்கையே ஏற்படுத்தும். இதனை நிச்சயம் தடுக்க வேண்டும்.

க. பொ. த சா. தரப் பரீட்சை மார்கழியில் எடுத்த மாணவர்களுக்கு முடிவுகள் வருமுன்பே அதாவது தையிலேயே (பாடசாலைகளில் கூட வகுப்புக்கள் தொடங்கு முன்பு) உயர்தரவகுப்புக்கான பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பமா


(3ம் பக்கம் பார்க்க)

# அடக்கு முறையின் அதியுச்ச நிலையில்

எமது அபிலாசைகளை, உணர்வுகளை, உரிமைகளை ஆயுதரீதியாக அடக்கநினைத்து பாரிய இன ஒழிப்புநடவடிக்கைகளிலீடுபடும் சிறீலங்கா அரசின் அதியுச்ச கொடிய தோற்றமே யாழ் வைத்தியசாலையை மூடிவிடுமாறுவிட்ட உத்தரவு. நன்கு திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே சர்வதேச பயங்கரவாதிகளின் துணையோடு இப்படுகொலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை காலங்களும் வைத்தியசாலை மீதான

ஊழியர்கள், நோயாளர்கள் உயிரிழந்ததுடன் விலைமதிப்பற்ற, சொல்லொணா துன்பங்கள் விளைவிக்கப்பட்டன. இருந்தும் சிறீலங்கா வெளிஉலகை ஏமாற்ற "தார்மீக சாமி" வேஷத்துடன் பலதடவைகள் ஏற்றுக்கொண்டு, இனி ந-- ட --- வா-- து என்றும் பின்போ பயங்கரவாதிகளின் ஷெல்லே காற் -- றில் வி : -ல--கி என பல்லவி பாட முற்பட்டது. இவையனைத்தும் ஒன்று திரண்டு வரும் வைத்தியசாலை நிர்வாகம் உட்பட மக்கள் சக்

தமாக விமான, ஹெலி குண்டு வீச்சுகள், முப்படைத் தாக்குதல்கள், ஷெல் துப்பாக்கி பிரயோகங்கள், தினம் தினம் பாதிப்புறும் எம்மக்களை உயிர்பிக்கும், உயிர்காக்கும் ஒரே ஒரு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான இந்நிலையத்தைகூட இக்கஷ்டநிலையிலும் மூடிவிட முனைவது ஏன்? அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்படப்போகும், கொடிய நோய்களில் சிக்கியுள்ளவர் ஏன்? அனைத்து தமிழனையும் தப்பவிடாது அழித்து



கோட்டை ஷெல் தாக்குதலால் பாதிக்கப்பட்ட யாழ் வைத்தியசாலை

விமானத் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள்.

கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடாத்தப்படும் பயங்கர ஷெல் தாக்குதல்கள்.

அத்தியாவசிய, உயிர்காக்கும் மருந்துகள, உபகரணங்கள்வழங்கப்படாமை எரிபொருள் தடைகள் மூலம் போக்குவரத்தை தடை செய்தல்.

யாழ் / வைத்தியசாலை சூழலை யுத்த பிராந்திய-

தியால் முகமூடி கிழிக்கப்பட்டு சர்வதேச ரீதியில்பலத்த அவமரியாதை தாங்காது -- அலஸ் --- கமிஷன் என ஏதோ எல்லாம் அலறியது. அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் எம் மக்களை மிரட்டி வெளியேற்றி விடமுடியும் என்ற கனவில் தான் இம்முடிவு.

சர்வாதிகாரி ஹிட்லரே உலகமகாயுத்த காலங்களில் கூட வைத்தியசாலைகள், ஆலயங்கள், பாடசாலைகளைத் தவிர்த்தே தாக்குதலை மேற்கொண்டான். ஆனால் இக்

விட வேண்டும் என்பதையே காட்டுகிறது. இந்நடவடிக்கைகளை பார்க்கும்போது ஒவ்வொரு தமிழனும் தானுவே தற்கொலை செய்து கொள்ள வேண்டும். என்று கூட முடிவுகள் எடுக்கப்படலாம். இதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அனுமதித்து நாமே நம்மை அழித்துக் கொள்ளப்போகின்றோமா? இவ்வளவு காலமும் அனைத்து தடைகளையும் முறியடித்து



இவர்களும் தார்மீக அரசிற்கு பயங்கரவாதிகள்

மாக்கி அப்பாவிமக்களை விரட்டி அடித்தல்.

அம்புலன்ஸ் மீதான குண்டுவீச்சுக்கள் ------ வைத்தியர் மீதான துப்பாக்கி பிரயோகம்.

என்பன இதை தெளிவாக உணர்ந்துகொள்ளப் போதுமானவை. இவை மாத்திரமின்றி இதுவரை இவ் வைத்தியசாலை மீது மட்டும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினால் 10மக்கள மீது காண்டுமிராண்டித்

கொடிய இனவெறியரசோ திட்டமிட்டு இவற்றை இலக்காகக் கொண்டே தாக்குதல்களை மேற்கொள்கிறது அனைத்து நாகரீக உலகமும் விழிப்பாக அவதானித்தே வருகின்றன. மேலும் வெறுமனே எம்மை அழிக்க அவை கைகட்டிக் கொண்டிருக்கப்போவதில்லை. இந் நிலையிலோ எம்


செயற்படும் வைத்தியசாலை நிர்வாகம், ஊழியர்கள்...... அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. மேலும் அனைத்து தமிழ் பேசும் மக்களும் அணிதிரண்டு இந்நடவடிக்கைகளை முறியடிப்போம். எமது பாதுகாப்பை உறுதியாக்கி சிறிலங்கா அரசுக்கு தக்க பதிலடி கொடுப்போம்....... "ஒரு மக்கள் போராட்டம் ஒடுக்கப்பட்டதாக வரலாறே இல்லை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தமிழீழ வரலாற்றில் புதியதோர் அத்தியாயம் படைத்துவிட்ட மேதின எழுச்சி





எமது மேதினப் பிரகடனம்;- சுதந்திர தமிழீழ தனியரசுதான் எமது பிரச்சனைக்கு ஒரே தீர்வு. இறுதித்தீர்வு. இந்தத் தனியரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்


# போராட்டத்தை ஆரம்பித்த...



ரஞ்சன்



செல்லக்கிளி



லிங்கம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ட்றக் மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுட முடிகிறது. வெடியின் அதிர்வில் தெரு விளக்குகள் அணைந்து விட்ட போதிலும் மிகக் கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராக குறிவைத்துச்சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு; ராணுவத்தினரைப் பொறுத்தவரை தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத் தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பி தான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால், ஆற்றலால் வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்த போதிலும் இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் ட்றக்கிலிருந்து கீழே குதித்து சில்லுக்குள் புகுந்து கொண்டு, மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன. இத்துடன் ட்றக்கின் முன்புறத்திலிருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் $G_3$ இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால் தம்பிக்கு உதவிக்கு எவருமே இல்லை. நாம் எமது திட்டத்தின்படி ஜீப்பை முன்னே விட்டு ட்றக் வண்டிக்கு கண்ணி வெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அத்திட்டத்தின படி தம்பியை மிகப் பின்னுக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போ ...னியாகவே ட்றக்கை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டு விட்டார். இதே நேரம் ஜீப்பை நோக்கி சுட்டுக் கொண்டிருந்த விக்ரர் தனக்கு 20 யார் பின்னே ட்றக் நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும்; அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை ட்றக்கை நோக்கித் திருப்பினான்- ட்றக்கின் முன் ,கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான்.

அப்போது தான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்த போது சாரதி தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன்நோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து ''பஸீர் காக்கா'' ''றிப்பிட்டரால்'' ஜீப்பை நோக்கி சுட்டுக் கொண்டிருந்தார். றிப்பிட்டரில் தோட்டாக்கள் முடியும் போது அதை மாற்றித் திருப்பித் தாக்கும் படி சொல்லி உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த் அப்பையாண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் S. M. G உடன் ஓடி வந்தான். 'சுடு' என்ற அப்பையாண்ணை உடனே ''கவனம் எங்கட பெடியளோ தெரியாது. பார்த்துச் சுடு'' என்றார் றிப்பிட்டர் சத்தம் ஓய வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது S. M. G யை அப்பையாண்ணை ஓடிவந்து எடுத்துக் கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்கு தலைமை தாங்கிய லெப்ரினன்ட் என்பதை பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட ராணுவ பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதே நேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் ''தம்பியிடம் ஓடு'' என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.

ஆனால் ரஞ்சனும் சகபோராளியும் தம்பியை நோக்கி சென்றடைந்த போது ட்றக்கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும் தம்பியின் தனி ஒரு $G_3$ ஓய வைத்து விட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ்வீரச் செயலை முடித்து விட்டு அமைதியாக வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து முடிந்த ரவைக் கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி.

மதிலேறிக்குதித்த ரஞ்சனும் மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக்கண்டு ஆயுதத்தை தயார் நிலைக்கு கொண்டு வந்து 'யாரது' என்றவாறு முன்னே வந்தனர்.

'அது நான்ராப்பா' என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி இங்கே எல்லாம் முடிந்தது உங்கடை பக்கம் எப்படி என்றார். 'அண்ணை எங்கடை பக்கம் பிரச்சனையில்லை' என்றார் ரஞ்சன்.

'இங்கையும் எல்லாம் முடிந்து விட்டது. ஆனால் எனக்கு சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை. காயப்பட்டிட்டாங்களோ தெரியவில்லை. வா பார்ப்போம்'' என்றவாறு தன் பிரியத்திற்குரிய $G_3$ யை தூக்கிக் கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக்குதிப்பதற்குமுன் ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஓர் குண்டை வீசினான் குண்டு ட்றக்கின் கீழ் விழுந்து வெடித்து எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன் பின் மதிலேறிக் குதித்து றோட்டைத்தாண்டி புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான் அங்கு புலேந்திரன் சந்தோசத்தை காணவில்லை. எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச்சேகரியுங்கள்'' எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைபார்த்து ''அண்ணை அவன் அநுங்குகிறான''. மீண்டும் ஒரு முறை முழங்கிய $G_3$ அவனின் அநுங்கலுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

இதன் பின் ட்றக்கைநெருங்கி ஆயுதங்களை சேகரிக்கத் தொடங்கினர் தம்பி எதற்கும் என்று வெளியே கிடந்த இராணுவத்தினரின் தலையில் இறுதி அத்தியாயத்தை $G_3$ ஆல் எழுதி வைத்தார். $G_3$ யின் வேகம் மண்டையோடு களைப் பிளக்க வைத்தது.

இதே நேரம் பல்கலைக் கழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவ வீரனை இன்னோர் போராளி துரத்திச் சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்து விட்டு பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் ட்றக்கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம்.

''கரையால் வாருங்கள்'' என்ற தம்பியின் குரல் எம்மை வரவேற்றது.

எல்லோரும் தம்பியை சூழ்ந்து கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழ்ச்சியுடன் இறந்து கிடந்த ராணுவத்தினரின் ஹெல்மெட்டை தலையில் போட்டுக் கொண்டு ட்றக்கின் கீழே இறந்து கிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களை தேடி எடுத்துக் கொண்டான்.

இத் தாக்குதல் இரவுநேரமாதலால் எம்மையும் இராணுவத்தினரையும் வேறு பிரிக்க நாம் ஹெல்மெட்டைத் தான் குறியீடாகப் பாவித்தோம். எனவே ஹெல்மெட்டுடன் ஓர் உருவம் நகர்வதைக் கண்ட தம்பி உடனடியாக துப்பாக்கியை தயார் நிலைக்கு கொண்டு வந்து ''யாரது'' என்று வினவ அம்மான் 'அது நான் தம்பி' என்றவாறு தன் தவறை உணர்ந்து ஹெல்மெட்டைக் கழற்றினார்.

பொன்னம்மானை செல்லமாக கண்டித்தவாறு எல்லாரையும் சரி பார்க்குமாறு தம்பி பணிக்க' அம்மானைக் காணவில்லை' என்று விக்ரர் கத்தினான், விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். 'டேய் அம்மானுக்கு வெடி விழுந்திட்டுது' என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது, எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும் போது அம்மானின்உடல்குளிர்ந்து விட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட றெஜி ஆயுதங்களை பொறுக்கினான்.

வான் புறப்படத் தொடங்க மழையும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது. எமக்கு செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த வான் எமது முகாம் நோக்கிப் பறக்கிறது.

**-அன்புடன் கிட்டு**

## கிராமரீதியான ........

(1-ம் பக்கத் தொடர்)

எமது எதிரிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மட்டுமல்லவே!

எனவே அனைத்து எதிரிகளின்செயற்பாட்டையும் முறியடித்து எமதுவிடுதலையை வென்றெடுக்க, எமது பிரதேசத்தை எமது மக்களை, எம்மை நாமே தற்பாதுகாத்துக் கொள்ள அனைவரும் தவறாது உயர்ந்த பங்களிப்பினைநல்குவதனூடாக அனைவரும் அணிதிரள வேண்டும்.

எமது பிரதேசத்தில் ',அன்னிய''ர்கள் நடமாட்டம், இராணுவம் தரையிறங்கலாம் என்று கருதக் கூடிய இடங்களில் முன் கூட்டியே திட்டமிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மேலும் எமது விடுதலைக்கு அவசியமான செயற்பாடுகள் பற்றி அவ்வப்பகுதிகளிலுள்ள மக்களே பரிபூரணமாக ஈடுபடுவார்கள். இதனால் அனைத்துப் பகுதி மக்களைப் பாதுகாப்பதுடன் களவு, கொள்ளை போன்றவற்றையும் தடுத்து நிறுத்தி எமது போராட்டத்தை வலுப்படுத்திக் கொள்ளமுடியும்.

மேலும் இங்கு கடமையாற்றும் அனைத்து மக்களும் மிக மிக அன்பாகவும், நிதானமாகவுமே செயற் படுவார்கள். எனினும் இதனாலேற்படும்சிறியஅசௌகரியங்களைக் கருத்திற்கொள்ளாது முற்று முழுதான விடுதலையைக் கருத்திற்கொண்டு அனைவரும் தமது உறுதியான பங்களிப்பை நல்குவோம். எம்மைநாமே பாதுகாப்போம்.

**'களத்தில்'** பத்திரிகை பற்றிய விமர்சனங்கள், போராட்டம், உள்நாட்டு, சர்வதேச அரசியல் சம்பந்தமான அனைத்து ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

ஆசிரியர்,
களத்தில்

என முகவரியிட்டு புலிகளின் குரல் பெட்டியினுள் இடவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# போராட்டத்தை ஆரம்பித்த வரலாற்று நாயகர்களுக்காக ...


1972 களிலேயே தோற்றம்பெற்ற தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் மாபெரும் திருப்பு முனையை, ஓர் புதியசகாப்தத்தை படைத்தது 1983 யூலை 23ம்திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற 13 இராணுவ வீரர் தாக்குதலாகும்.

இவ் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதலில் பங்கேற்ற விடுதலைப்புலிகளில் பலர் இன்று எம்முடன் இல்லை. போராட்டத்தை ஆரம்பித்து வைத்த இத்தாக்குதலில் பங்கேற்ற வரலாற்று நாயகர்களான செல்லக்கிளி, பொன்னம்மான், விக்ரர், கணேஸ், ரஞ்சன், றெஜி, லிங்கம் ஆகியோரின் நினைவாக - - - - - - -

- இட்டு


விக்ரர்


பொன்னம்மான்


றெஜி


கணேஸ்

1983ம் ஆண்டு யூலை 23ம் திகதி இரவு 11 மணியளவில் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற டெலிக்காவான் வந்துகொண்டிருக்கிறது. வானை செல்லக்கிளி செலுத்த அவனை அடுத்து கையில் S.M.G உடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறுன் விக்ரர். அவனை அடுத்து நான் வானின் பின்பகுதியில் தம்பி, மற்றும் ஏனைய தோழர்கள்.

நா முன்பு திட்டமிட்டபடி வான் தபால்பெட்டிச் சந்தியில் நிற்க எல்லோரும் கீழே இறங்குகிறேம்.

அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும்.

வான் அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க அயல் சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத் தொடங்க விக்ரரும் செல்லக்கிளியும் (ராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரக்கக் கதைத்தபடி ரேட்டிலே நடக்கத் தொடங்க வெளியே எட்டிப் பார்த்த தலைகளை காணவில்லை. வெளிச்சம் போட்ட இருவீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டது. யாரும் வெளிவரவில்லை. ராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்து விட்டனர்:

முன்பு திட்டமிட்டபடி அப்பையா அண்ணை, விக்ரர் செல்லக்கிளி, மூவரும் வெடிகளை புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும் செல்லக்கிளியும் பிக்கானல் ரேட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர். கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகையில் வெடிமருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்கமுடியாத தலையிடி அதன்பின் கிடங்கு வெட்டி, (இறுகப் போடப்பட்ட தார் ரேட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகுவானதல்ல) இவற்றையும்விட தாக்குதலின் போது சண்டையும் போடவேண்டும்.

எமது தகவலின்படி சுமார் நள்ளிரவு 12மணியளவில் பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு ட்ரக் வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம். ஜீப்பில் 4 ராணுவத்தினரும் ட்ரக்கில் 10பேர் அளவிலும் வருவார்கள் என தகவல். எனவே யாழ் பல்கலைக்கழக பின்வீதி பலாலி ரேட்டை சந்திக்கும் இடமாகிய தபால் பெட்டிச் சந்தியில், கண்ணிவெடி புதைத்து இரண்டாவதாக வரும் வாகனத்துக்கு கண்ணி வெடியால் தாக்க முன்னல் வரும் வாகனத்தைசுட்டுமடக்குவது என்று நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு வாக்கிரோக்கி அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.

விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்படுத்திக் கொண்டிருக்கையில் மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து தத் தமக்கு உரிய இடத்தை தேர்ந்தெடுக்கத் தொடங்கினேம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியை புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றுன். சுவர் அவனை விட உயரமாக இருக்க பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காக தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு அந்த சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையை சீர்படுத்திக் கொள்கிறுன். துப்பாக்கியை தோளில் வைத்து இயக்கிப்பார்க்கும் விதங்களையும், துப்பாக்கியை இலகுவாக இயக்க முடியுமா என்பதையும் சரிபார்த்துக் கொள்கின்றுன்.

தம்பி (பிரபாகரன்) தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்து தாக்குதலுக்கு தன்னை தயார் படுத்திக் கொண்டிருக்கையில் வாக்கி செல்லக்கிளியை கூப்பிடுகின்றது

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாக தன் வேலையை முடித்துக்கொண்டு மீதி லேலையை அப்பையா. அண்ணையிடம் விட்டு விட்டு தனது நிலைக்கு செல்லுகின்றுன். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல்வெடிக்க வைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத்துப்பாக்கியுடனும் தயாரகின்றுன்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது அப்பகூட வேலைமுடியவில்லை. விக்ரர் ''அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ'' என்றுகத்த அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக் கொண்டிருக்கையில், வாக்கி மீண்டும் அலறியது.

''அம்மான் நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் தான் முன்னுக்கு ஜீப் பின்னல் ட்ரக்'' என்று அறிவித்தது. எனவே அம்மான் ட்ரக் வண்டிக்கு கண்ணி வெடியால் தாக்க முன்னல் வரும் ஜீப்புக்கு நாம தாக்குதல் தொடுக்க தயாராகிக் கொண்டிருக்கையில் வெளிச்சங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வர விட்டு விட்டு, பின்னல் வரும் ட்ரக்வண்டியை கண்ணிவெடியால் தாக்கி அதில் தப்புவர்களை சுடுவதாக எமது திட்டம் ட்ரக் வண்டியில் இருந்து பின்பக்கமாக இருப்பவர்களை சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கின்றுன். விக்ரரையும் தாண்டுபவர்களை. கவனிக்க தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்து கொண்டிருந்தது. நான் எட்டிப்பார்த்தேன். முன்னல் இருவிளக்குடன் ஒருவாகனம் அந்த விளக்குகளுக்கிடையிலான இடைவெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்து கொண்டேன். அடுத்து ட்ரக். மெல்ல வந்து கொண்டிருக்கின்றன

நாம் ஜீப்பை தாக்குவதற்கு தயாராகிக் கொண்டு இருக்க ஜீப் விக்ரர் நின்ற இடத்தை தாண்டி கண்ணி வெடி வைத்த இடத்தை அண்மித்த போது கண்ணி வெடி வெடிக்க வைக்கப்பட்டு விடுகிறது எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை உண்மையில் ஜீப் வண்டியை விட்டு பின்னல் வரும் ட்ரக் வண்டிக்கே கண்ணி வெடி வைக்க இருந்தோம். இன்று வரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்க வைக்கப்பட்டது.என்பதுதெரியாது ஏன் என்றுல் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி. அதை விளக்கவில்லை சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரமில்லை. உடனே நானும் என்னேடு நின்றவர்களும் சுடத் தொடங்கினேம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை. எனவே பின்னல் நடப்பவை எமக்கு தெரியவில்லை. என்னுடைய G3யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். ஜீப்பின் விளக்கு உடைந்ததும் பின்னல் நின்ற ட்ரக்கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும்போது விக்ரர் தன் தலையை சுவருக்கு உள்ளே இழுத்துக் கொண்டு நிற்கையில் மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடி வருவது தெரிய அவனை குறி வைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் ஓடி வந்தவனின் உடலிலே பாய அவன் தூக்கி எறியப்படுகின்றுன். அப்படியே சுருண்டு விழுந்து விட்டான். இன்னுமொருவன் ஓடிவர அவனை நோக்கி சுட அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட குண்டுகள் அவனைத் விழுத்தவில்லை, ஆனுல் காயப்படுத்தின. ஆனுல் அவன் காயத்துடன் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடினுன். விக்ரர் அவனை திருப்பிச் சுட்டான். வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை. மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாக சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கி சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்த சுவாலையை மையமாக வைத்து சில வேட்டுகளைத் தீர்த்தான். பின்பு அது அடங்கி விட்டது. மேலும் ஒருசில உருவம் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்றுவிட்டது. விக்ரருக்கு விளங்கியது போடப்பட்ட குண்டுகள் முடிந்துவிட்டது குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைச்சட்டத்தை மாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை பின்னல் வந்த ட்ரக் வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். அவன் உடல் சில்லிட்டது. பெரிய வெளிச்சத்தையும், ஜீப்மேலே தூக்கி எறியப்பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே பிரேக்கை இறுக அமத்தினுன். ஏன் பிரேக் அழுத்தும் மிதி மீது ஏறிநின்றுன் என்றே கூறலாம்.

ட்ரக் பிரேக் போட்டு நின்றதும் ட்ரக்கின் பின் புறத்தில் இராணுவத்தினரும் துப்பாக்கியை தயாராக்கியவாறுஇருக்கையிலிருந்து எழத் தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டுமட்டும் சுவரின் மறைவிலே குந்திஇருக்க இரு வாகனங்களும் அவரைத் தாண்டுகிறது சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப்வண்டி கண்ணிவெடியை நெருங்கிக் கொண்டிருக்க ட்ரக் அவருக்கு சரியாக 20யார் தூரத்தில் சென்றுகொண்டு இருக்க கண்ணிவெடி வெடித்தது. ட்ரக் அவருக்கு மிகக் கிட்டகையில் எட்டிப் பிடிக்குமாப் போல் தூரத்தில் பிரேக்போட்டதால் குலுங்கி நிற்க தான் எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய G3 A3 வெடிக்கத்தொடங்கியது.

ட்ரக்கின் இருக்கையிலிருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாததுமான நிலையில் தம்பியின் G3 வெடிக்க தொடங்கியது.

G3 A3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள் தாக்குதலுக்கு தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத்தொடங்கியது.

சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத்திருப்பம் தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்க வைத்துவிட்டது.

ஆனல் இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறிதவறுமலும் துப்பாக்கியை கையாள்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம் ட்ரக்கில் வந்த 9 இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

(7-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்